அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 08/2014

எனது இல : EST-07/OFTIM/07/1011
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.03.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச அலுவலர்களின் அலுவலக நேரம்**

அரச அலுவலர்களின் அலுவலக நேரம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2006.05.30 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்கமிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்பால் தங்கள் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது. மேற்படி சுற்றறிக்கையின் மூலம் வரையறுக்கப்படும் அரச அலுவலர்களின் அலுவலக நேரம் தொடர்பில் பின்வரும் சலுகைகளையும் வழங்குவதற்கு 2013.11.11 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. உரிய அலுவலரினால் நிறைவேற்றப்படும் பணிகள் தடங்கலின்றி தொடரப்பட முடிவதுடன் அலுவலக நேரத்தில் வேறுவகையில் எதுவித பணிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை குறிப்பிடும் நிறுவனத் தலைவரினால் மேற்கொள்ளப்படும் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டு பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்க முடியும்.

(அ) மு.ப. 8.30 மணிக்கு கடமைக்கு அறிக்கையிட வேண்டிய அலுவலர்களுக்கு, அலுவலக நேரத்தின் பின்னர் அத் தினத்திற்காக அவசரப் பணி நிமித்தம் நிறைவேற்றப்படுவதற்கு எதுவித கடமைகளும் இல்லாத நிலமைகளில் மட்டும் மு.ப. 8.15 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அவர்கள் கடமைக்கு அறிக்கையிட்டால் பி.ப. 4.00 மணிக்கு அலுவலகத்தை விட்டு வெளியேறுவதற்கு அனுமதியினை வழங்குதல்.

(ஆ) ஆரம்ப தர அலுவலர்களுக்கு 1980.04.01 ஆம் திகதிய 162 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்படும் சலுகையினை மேலும் வழங்குதல்.

03. மேலே (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பிடப்பட்ட சலுகைகளை உரிய அலுவலர்கள் அவர்கள் அலுவலகத்தில் இருக்கும் காலப்பகுதியின் போது அவர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுகின்றார்கள் என்பதைச் சரிபார்த்ததன் பின்னர் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

04. மேலே பந்தி 2 (அ) இலுள்ள சலுகைகள், உத்தியோகபூர்வ வாகனம் குறித்தொதுக்கப்பட்டுள்ள பதவி ஒன்றினை வகிக்கும்/ அதில் பதிற்கடமையாற்றும்/ கடமைகளை நிறைவேற்றும் அலுவலர்களுக்கு/ போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு மற்றும் குழுப் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் தொடர்பில் பிரயோகிக்கப்படக்கூடாது.

ஒப்பம்/. பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு